# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2007 - 2008

## தமிழ்மொழி - ஆண்டு 6

சுட்டெண்:.............................................................. நேரம்: 150 நிமிடங்கள்

**1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழின் இனிமை காரணமாக அதற்கு வழங்கும் பெயர்களில் ஒன்று
   அ) சங்கத்தமிழ் ஆ) தேன்தமிழ் இ) செந்தமிழ் ஈ) பைந்தமிழ்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை
   அ) 247 ஆ) 216 இ) 12 ஈ) 18

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழ்மொழிக்கு மட்டுமே உரிய சிறப்பொலியை உடைய எழுத்து
   அ) ள ஆ) ல இ) ஐ ஈ) ழ

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அறநெறி தவறாத மன்னன் என மகாவம்சம் போற்றும் தமிழ் மன்னன்
   அ) தேவநம்பிய தீசன் ஆ) துட்டகெமுனு இ) எல்லாளன் ஈ) இராசராசசோழன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. உயிரிலும் உயர்ந்தது என்று குறள் கூறும் பொருள்
   ஆ) வழக்கம் ஆ) விழுப்பம் இ) ஒழுக்கம் ஈ) மழுக்கம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. உள்ளத்தினின்று வெளிப்படும் நல்லியல்பு
   அ) கலாசாரம் ஆ) வாழ்வு இ) நாகரிகம் ஈ) பண்பாடு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற பழமொழியின் கருத்து

அ) காற்றுள்ள போதே நெல் தூற்றவேண்டும்.

ஆ) செயலுக்குரிய சரியான பொழுதைத் தவறவிடுதல் ஆகாது.

இ) காற்றுள்ளபோதே பிறரைத் தூற்ற வேண்டும்.

ஈ) காற்றில்லாவிட்டால் தூற்ற முடியாது.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. குறள் :-

குணம்நாடிக் ____________ நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

அ) சுற்றமும் ஆ) குற்றமும் இ) கற்றும் ஈ) சீற்றம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. வாக்கியத்தில் கருத்து தொடங்கும் இடம்

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. 'துன்பம் நேர்கையில் யாழ்எடுத்து நீ' என்ற பாடலை எழுதியவர்

அ) நாமக்கல் கவிஞர் ஆ) கனகசுப்புரத்தினம் இ) காசி ஆனந்தன் ஈ) சோமசுந்தரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. குணப்பெயருக்குச் சிறந்த எடுத்துக்காட்டு

ஆ) கண் ஆ) அன்பு இ) படித்தல் ஈ) வேர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மயிலாடுமலையை இப்படியும் கூறுவர்.

அ) அழகமர்சோலை ஆ) அழகியசோலை இ) மலைச்சாரல் ஈ) கனிமரச்சோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தமிழ்ப்புலவருக்குத் தன் தலையையே கொடுக்கத் துணிந்த மன்னன்.

அ) எல்லாளன் ஆ) இளங்குமணன் இ) குமணன் ஈ) பண்டாரவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஒழுக்கத்தில் சிறந்தவரைத் தமிழர் ____________ எனப் போற்றுவர்.

அ) ஆன்றோர் ஆ) சான்றோர் இ) வள்ளல் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மான்கள் என்ற சொல் குறிக்கும் பால்

அ) ஆண்பால் ஆ) பலர்பால் இ) பலவின்பால் ஈ) ஒன்றன்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐